**எண்ணெய்ப்பனை**

1. **நாற்றாங்காலிலுள்ள பூச்சி:**

**1.நாவாய்ப்பூச்சி, கார்வல்ஹோயா அரிக்கே:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- நடுக்குறுத்து இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்
- இலைகள் காய்ந்து விழுந்துவிடும்
- நடுக்குறுத்து வளர்ச்சி குன்றி சுருங்கி விரிய முடியாமல் போகும்

**பூச்சியின் விபரம்:**

- இளம் குஞ்சுகள்: கரு ஊதா நிறம் உடலில் தலைப்பகுதி இளம்மஞ்சளாகவும், சிவப்புநிற கண்களும் பெற்றிருக்கும்
- வளர்ந்த புழுக்கள்: வயிற்றுப்பகுதியில் கருப்புநிறம் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- ஃபோரேட் 10 சத குறுணை 2 கிராம் அளவில் ஒரு பாலிதீன் பையில் போட்டு அப்பையை சிறு துளையிட்டு நடுக்குருத்துப் பகுதியில் போட்டு வைக்கவேண்டும்

**2.வளர்ந்த மரத்தை தாக்கும் பூச்சிகள்:**

2. **காண்டாமிருக வண்டு, ஒரைக்டஸ் ரைனாசிரஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- தென்னையில் உள்ளதை இணைக்கவும்

**பூச்சியின் விபரம்:**

- தென்னையில் உள்ளதை இணைக்கவும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தென்னையில் உள்ளதை இணைக்கவும்

**3. செந்தலைக் கூன் வண்டு, ரின்கோஃபோரஸ் ஃபெருஜீனியஸ்:**

- தென்னையில் உள்ளதை இணைக்கவும்

**4. மாவுப்பூச்சி, டிஸ்மிகாக்கஸ் பிரேவிபஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகள் மஞ்சளாகிவிடும்
- மரத்தின் வளர்ச்சிக் குன்றிவிடும்
- பனங்காயை தாக்கும்
- பூக்கள் முதிர்ச்சியடைவதற்கு முன்பாகவே விரிந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வெண்ணிற மாவுப்பூச்சி

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- பூச்சி தாக்கப்பட்ட பாகங்களை சேகரித்து அழிக்கவும்
- பூச்சியற்ற நடவுச் செடிகளை தேர்வு செய்து நடவேண்டும்
- 0.03 சதம் டைமீதோயேட் அல்லது 0.025 சதம் மீதைல் டிமேட்டான் தெளிக்கவும்
- மரத்திற்கு 10 கிரிப்டோலீமஸ் மான்ட்ரோஜீரி வண்டு விடவேண்டும்

5. **நத்தைப்புழுக்கள், தோசீயா அன்டமாணிக்கா:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- புழுக்கள் இலைகளைத் தின்று நரம்புகளை மட்டுமே விட்டுவைக்கும்
- புழுக்கள் வெளியில் மற்றும் நடுவில் இருக்கும் இலைகளை தாக்கும்
- புழுக்கள் மனிதர்கள் மீது படும் பொழுது அரிப்பு ஏற்படுத்தும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள்: நத்தை போன்று தட்டையாகக் காணப்படும்
- பச்சையான உடலில் மஞ்சள் நிற தலையுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- தாக்கப்பட்ட இலைகளை சேகரித்து எரிக்கவும்
- கார்பரில் 50 சதம் நனையும் துளை 0.1 சதம் தெளிக்கவும்

6. **அசுவிணி, மிஸ்டீரோனியூரா செட்டேரியா, சைசோஏபிஸ் ரொட்டோடிவின்டிரிஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலையின் அடிப்பாகத்தில் இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்
- இலைகள் சுருண்டு விடும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- டைமீதோயேட் @ 0.03 சதம் அல்லது 0.05 சதம் இலையின் அடிப்பரப்பில் தெளிக்கவும்

7. **சிலந்தி, டெட்ராநைகஸ் பைர்சி:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகளின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்
- இலை நிறமற்றதாகிவிடும் மேலும் தடிப்புகள் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- 1 லிட்டர் தண்ணீரில் 2 மி.லி டைக்கோபால் (அ) நனையும் கந்தக தூள் 2 கிராம் கலந்து தெளிக்கவும்

8. **மைனா, அகரிடோதிரிஸ் டிரிஸ்டிஸ் டிரிஸ்டிஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்**:

- இப்பறவை பழங்களை கொத்தி தின்று சேதப்படுத்தும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- பனங்காய் கொத்துகளை மூடி வைக்க வேண்டும்
- பனங்காய் கொத்துகளை 22 காஜ் கால்வனைஸ்டு இரும்பு கம்பி வலை (60 x 90 செமீ) கொண்டு மூடி வைக்க வேண்டும்
- காய்க்கும் வலைக்கும் 10 செமீ இடைவெளி இருக்க வேண்டும்
- எண்ணெய் பனையின் இலைக்கொண்டு காய்களை மூடி மறைக்கலாம்

9. **எலி, டட்டிரா இன்டிகா:**

**சேதத்தின் அறிகுறிகள்**:

- எலிகள் பனைமரத்தை குடைந்து எலி வலையை உருவாக்கும்

- பனையின் மத்திய பகுதியில் உள்ள இனிப்பான பகுதியை உண்டு சேதப்படுத்தும்
- எலியின் தாக்குதல் வெளியில் தெரியாது ஆனால் இலைகள் திடீரென்று வாடி காய்ந்துவிடும். சிலநேரங்களில் பனைமரம் இறந்துவிடும்

**எலியை கட்டுப்படுத்தும் முறைகள்:**

- பழத்தோட்டத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளவும்
- எலிகளின் தாக்கம் உள்ள பகுதியை 22 காஜ் கால்வனைஸ்டு இரும்பு வலையை பனைமரத்தின் அடிப்பகுதியில் சுற்றவேண்டும்
- எலிபொறிகள் வைத்து கவர்ந்து அழிக்கலாம்
- நச்சு உணவுகளாக ஜிங்ஃபாஸ்பைடு அல்லது ஃப்ரோமோடைலான் (அ) வார்பரின் அல்லது பியூமரின் வைத்து கட்டுப்படுத்தலாம்
- இரை விழுங்கிகளான பாம்பு, கழுகு, ஆந்தை, கீரி, பூனை மற்றும் நாய்கள் பழத்தோட்டத்தில் இயற்கையாக கட்டுப்படுத்துகிறது